DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 154 /2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **ராஜேந்திரன்** (P.w.10 ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22[th] day of May 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது புளியங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த வருடம் உழக்குடிக்கு வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வருவதற்காக இரு சக்கர வாகனத்தில் நானும், சோணைமுத்து என்பவரும் வந்து கொண்டிருந்தபோது தீயனூர் விலக்கு அருகே நாங்கள் வந்தபோது மாலை 5.15மணியளவில் நரிக்குடி காவல் நிலைய போலிசார் ஆஜர் எதிரியை அந்த இடத்தில் வைத்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். போலிசார் எங்களை எந்தஊர் செல்கிறோம் என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் மைலிக்கு செல்கிறோம் என்று சொன்னோம். அப்போது எதிரி திருப்புவனத்தில் நகை திருடி வந்ததாக போலிசாரிடம் எதிரி சொன்னார். போலிசார் நகையை எங்கே வைத்திருக்கிறாய் என்று எதிரியிடம்

கேட்டார்கள் அதற்கு அவர் எனது வீட்டின் சாமி ரூமிற்கு பின்னால் வைத்திருப்பதாக சொன்னார். அப்போது என்னையும், சோணைமுத்துவையும் நகை எடுப்பதற்கு வாருங்கள் என்று தூாதை கிராமத்திற்கு போலிசார் அவர்களுடைய காரில் அழைத்துச் சென்றார்கள். (ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளிக்க சாட்சியை அனுமதிக்க முடியாது என்று ஆட்சேபனை செய்யப்படுகிறது).

2. அப்போது எதிரி அவரது வீட்டின் சாமி ரூம் பின்னால் இருந்து இரவு 8.00மணிக்கு நகைகளை எடுத்து கொடுத்தார். மீதி நகைகளை எங்கே என்று போலிசார் கேட்டபோது எதிரி தனக்கு வெட்டு சீட்டு பழக்கம் இருப்பதனால் அதில் செலவு செய்துவிட்டதாகவும் மீதி பணத்தில் பைக் வாங்கிவிட்டதாக சொன்னார். அதன்பின்னர் சோணைமுத்துவையும் விசாரித்தார்கள், நான் வெளியே வந்துவிட்டேன்.

3. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். (ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **எதிரி தரப்பில் மேற்படி ஆவணத்தினை புலன் விசாரணை அதிகாரியின் மூலமாகதான் குறியீடு செய்யமுடியும் என்ற ஆட்சேபனையுடன் அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). (நகை கைப்பற்றுதலுக்கான அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் என்னுடையது. (**அந்த அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள் .

எ.த.கு.வி–

1. நரிக்குடி காவல் நிலையத்திற்கு இதற்கு முன்னர் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். இந்த வழக்கு விசயமாக சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். என்னை காவல் நிலையம் அழைத்துச் சென்றது யார் என்றால் போலிசார்தான் அழைத்துச் சென்றார்கள். அவ்வாறு போலிசார் அழைத்துச் சென்றபோது முத்துக்குமார் என்னுடன் வந்தாரா என்றால் போன் மூலம் தகவல் சொல்லி வந்தார். அவ்வாறு முத்துக்குமாருக்கு போன் மூலம் தகவல் சொல்லி காவல் நிலையம் வரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 5.00மணி இருக்கும். போன் செய்து எவ்வளவு நேரத்தில் காவல் நிலையம் வந்திருப்பார் என்றால் 20 நிமிடத்தில் வந்திருப்பார்.

2. முத்துக்குமார் வரும்போது திருடுபோன பொருட்களை போலிசார் காட்டினார்களா என்றால் காட்டினார்கள். அவ்வாறு திருடுபோன பொருட்களை காட்டும்போது முத்துக்குமார் கையொப்பம் செய்து வாங்கி கொண்டாரா என்றால் இல்லை. எனது ஊருக்கும், தீயனூருக்கும் இடையே 14 கிமீ தூரம் இருக்கும். தீயனூருக்கும், இலுப்பைகுளத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 17 கிமீ தூரம் இருக்கும். தீயனூருக்கும், காவல்நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 5 கிமீ தூரம் இருக்கும்.

3. போலிசார் என்னை விசாரிக்கும்போது வேலைக்கு சென்றதாக சொன்னேனா என்றால் ஆமாம். எதிரி போலிசார் வாகனத்திற்குள் இருந்தாரா என்றால் இல்லை, வெளியேதான் இருந்தார். அந்த இடம் ஆட்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் இல்லை, ஒத்தவீடுதான் உள்ளது. போலிசார் அழைத்துச் சென்றதாக சொல்லக்கூடிய வாகனம் என்ன வாகனம் என்றால் ஜீப் போல் இருந்தது. அன்றையதினம் நான்

வேலையை முடித்து வீட்டிற்கு போகும்போது மணி எவ்வளவு இருக்கும் என்றால் 9.00மணி இருக்கும்.

4. காவல் நிலையத்திற்கு நான் செல்லும்போது என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கிவிட்டார்களா என்றால் வாங்கிவிட்டார்கள். அந்த கையொப்பம்தான் நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள கையொப்பம் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்யும்போது மணி என்ன இருக்கும் என்றால் என்னை 5.30மணிக்கு விசாரிக்கும்போதே கையொப்பம் வாங்கிவிட்டார்கள். தூாதை கிராமம் நரிக்குடி கிராமத்தில் இருந்து எந்த திசையில் எவ்வளவு தொலையில் உள்ளது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் சென்ற வீடு ஓட்டு வீடு அல்லது கூரை வீடா என்றால் காரை வீடு ஆகும். நான் வீட்டிற்குள் செல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் மட்டும்தான் சென்றார்களா என்றால் எதிரி மட்டும்தான் சென்றார். அந்த வீட்டில் வேறு ஆட்கள் யாரும் இருந்தார்களா என்றால் 4 நபர்கள் இருந்தார்கள்.

5. நான் சொன்னமாதிரி பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவும் கிடையாது என்றாலும் நான் தூாதைக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. ஏற்கனவே போலிசார் சொன்னதின் பேரில் சாட்சி சொல்லும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. எதிரி சட்டவிரோத காவலில் வைக்கப்பட்டு அங்கு வைத்து பொருட்கள், ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றாலும் என் முன்னிலையில் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம். எதிரியை நான் பார்த்ததும் கிடையாது என்றால் சரியல்ல. போலிசார் அடையாளம் காட்டப்பட்ட பிறகுதான் தெரியும் என்றால் சரியல்ல. நானும் முத்துக்குமாரும் ஒன்றாக வேலை பார்ப்பவர்கள் என்றால்

சரியல்ல, அவர் காண்ட்ராக்டர் என்பதால் தெரியும். நான் முத்துகுமாரிடம் கொத்தனாராக வேலை பார்ப்பதால் நண்பர் என்ற அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.